**Deposition of witness**

**(Chapter XXII Code of Criminal Procedure)**

-------

**IN THE COURT OF DISTRICT MUNSIF, MELUR**

| | | |
|---|---|---|
| Calender | : | O.S.No.171/2015 |
| Preliminary Register | : | |
| Sessions | | |
| Deposition of Witness for | : | பி.வா.சா.1 திருமதி.சாவித்திரி க.பெ.தர்மாங்கதன் |
| Court | : | District Munsif Court, Melur. |
| Name | : | |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of of the 12th day of April 2023

12.04.2023
O.S.No.171/2015

பி.வா.சா.1 திருமதி.சாவித்திரி க.பெ.தர்மாங்கதன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை**

நான் பிரதிவாதி ஆவேன். எனது வாக்குமூலத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது. 09.11.2011 தேதியிட்ட என் தாயார் ஏலம்மாளின் இறப்பு சான்றிதழ் அது **பி.வா.சா.ஆ-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் தாய்மாமன் சந்தானம் சேர்வை அவர்களின் இறப்பு சான்றிதழ் அது **பி.வா.சா.ஆ-2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 23.11.2016 தேதியிட்ட எனது தாய்வழி பாட்டி மோளபிச்சி என்பவரின் இறப்பு சான்றிதழ் அது **பி.வா.சா.ஆ-3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 01.12.2011 தேதியிட்ட ஏலம்மாளின் வாரிசு சான்றிதழ் அது **பி.வா.சா.ஆ-4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல் வழக்கு எண்.1/2012 வழக்கின் தீர்ப்புரை அது **பி.வா.சா.ஆ-5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல் வழக்கு எண்.1/2012 வழக்கின் தீர்ப்பாணை அது **பி.வா.சா.ஆ-6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.